# வெஸ்டன் இந்தியா மிஷன்
# Western India Mission

**செய்திமலர்** **பிப்ரவரி 2022**

**கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு,**

புதிய ஆண்டிலும் இரண்டாவது மாதத்தைக்காணச்செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம். கடந்த நாட்களிலெல்லாம் நம்மைக் கண்மணி போல பாதுகாத்து வந்த தேவன் இந்த புதிய மாதத்திலும் நம்மைப் பாதுகாத்து வழி நடத்துவாராக.

கல்லூரியில் பயிலும் நமது மாணவ மாணவிகள் இம் மாதம் நடைபெறும் ஆன்லைன் தேர்வுகளை சிறந்த முறையில் எழுத தேவன் அவர்களுக்கு ஞானத்தையும், பெலனையும், நல்ல சூழ்நிலைகளையும் தரும்படி விசேஷமாக ஜெபித்துக்கொள்ளுங்கள். இந்த பெருந்தொற்று காலத்தில் தொடர்ந்து படிக்க ஏற்ற சூழ்நிலைகள் உருவாக்கப்படவும் ஜெபியுங்கள். பெருந்தொற்றின் 3வது அலையின் தாக்கம் குறைந்து, மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பவும் , மக்களின் பொருளாதார நிலை மேம்படவும், ஞாயிறு ஆராதனைகள் வழக்கம் போல் நடைபெறவும், ஊழியங்கள் தடையின்றி நடைபெறவும் ஜெபியுங்கள்.

தற்பொழுது நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு வீடுகளிலும் மருத்துமனைகளிலும் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் மக்களை தேவன் விரைவில் குணமாக்கவும், அவர்கள் குடும்பங்கள் பாதுகாக்கப்படவும் ஜெபியுங்கள். தற்போது உள்ள கால சூழ்நிலைகளின் காரணமாக சிறுபிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள். தேவன் அவர்களுக்கு நல்ல சுகத்தையும், பாதுகாப்பையும் அருள ஜெபித்துக்கொள்ளுங்கள். சிறுவர்கள், வாலிபர்கள் smart phone தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு அடிமையாகாமல் பயனுள்ள வழியில் அவற்றை பயன்படுத்த ஜெபியுங்கள்.

நம் தேசத்தில் ஆளுகை செய்பவர்களும், அதிகாரத்தில் இருப்பவர்களும் இந்த பெருந்தொற்றின் காலத்தில் சரியான முடிவுகளை எடுத்து அதற்கேற்றபடி தேசத்தை வழிநடத்திச்செல்ல தேவன் அவர்களுக்கு ஞானத்தையும் தெளிவான வழி நடத்துதலையும் தர ஜெபித்துக்கொள்ளுங்கள். இந்த காலகட்டங்களில், சபைகள் பாகுபாடின்றி தேவராஜ்யம் கட்டும் பணியில் ஒன்றிணைந்து செயல்படவும், பரிசுத்த ஆவியானவர் சபைகளை ஆளுகை செய்யவும், "இந்த தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்கு செவிகொடுக்கம். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" (யோவான் 10:16) என்ற வேத வசனம் நிறைவேற வேண்டும்.


**பெண்கள் கூடுகையின் ஜெப நேரம்**

# இந்த மாதச் செய்தி : தேவனில் நிலைத்திருங்கள்

இந்த உலகத்திலே மனிதர்கள் நிலைதடுமாரி திரிகிறதை பார்க்கமுடிகிறது. எந்த ஒரு காரியத்திலும் நிலையாக இருக்க முடியாமல் அனேக காரியங்களை, நன்மைகளை, இழந்து போகிறோம் கிறிஸ்தவர்களாகிய நாமும் கூட வேதவசனங்களின் படி நிலைத்திருக்காமல் வேதத்தை வாசிக்கிறோம் அதன்படி நடப்பதில்லை வசனம் இவ்வறாக சொல்கிறது "என் பிள்ளைகளே வசனத்தினாலும் நாவினாலுமல்ல கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம்" (1 யோவான் 3:18)

நம்முடைய பேச்சினால் அல்ல கிரியை மூலமாக வெளிக்காட்ட வேண்டும் என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து விரும்புகிறார். 1 யோவான் 4:16 "தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம் தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான் தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்." நாம் தேவனிலே, அவர் அன்பிலே நிலைத்திருக்க வேண்டுமானால் நம்மிடத்தில் காணப்பட வேண்டிய கிரியைகள் என்னவென்று நாம் தியானிக்கலாம்.

## தேவனுடைய குமாரனை அறிக்கை பண்ண வேண்டும் :-

"இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்" (1 யோவான் 4:15). இயேசுவானவரை நம் வாயினாலே எல்லா வேளைகளிலும் எல்லா சூழ்நிலைகளிலும் வெளியரங்கமாக அறிக்கை பண்ண வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார். அவரை அறிக்கை செய்யும் போது அவருடைய நாமம் மகிமை படுகிறது. மத்தேயு 10:32-ல் வேதம் சொல்லுகிறது "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்." ஆகையால் என் அன்பான தேவ பிள்ளைகளே நாம் அவரை அறிக்கை பண்ணும்போது அவரின் அன்பிலே நிலைத்து நிற்கிறோம். அவரில் நிலை நிற்கிறவர்களை ஆசீர்வதித்து கனப்படுத்தி மேன்மை படுத்துவார் நம் ஆண்டவர்.

வேதத்தில் ஒரு சம்பவத்தை லூக்கா 8:2639 வரை உள்ள வசனங்களில் வாசிக்கிறோம். கதரேனருடைய நாட்டுக்கு இயேசுகிறிஸ்து செல்கிறார். அங்கே பிசாசு பிடித்த ஒரு மனிதன் கல்லறைகளின் நடுவே வசிக்கிறான். தன்னை தானே காயப்படுத்தி கொண்டவனாக எவராலும் பிடிக்கமுடியாதபடி பலமுள்ளவனாக இருக்கிறான் அவனுக்குள் ஏராளமான பிசாசுகள் குடியிருந்தன. அந்த மனிதனிடத்தில் இருந்த பிசாசுகளை இயேசுவானவர் துரத்துகிறார்; தெளிந்த மனிதனாய் வஸ்திரம் தரித்து அவர் பாத படியில் அமர்ந்திருக்கிறான். இயேசு புறப்படும்போது அவரோடு கூட தானும் வருகிறேன் என்றான்.



ஆனால் இயேசு நான் உனக்கு செய்தவைகளையெல்லாம் சொல்லுபடி கட்டளை கொடுத்து திரும்பி விடுகிறதை பார்க்கிறோம். அந்த மனிதன் சும்மா இருக்கவில்லை ஆண்டவரை அறிக்கை செய்யும்படியாய் பட்டணமெங்கும் அவர்செய்த அற்புதங்களை பிரசித்தப்படுத்தினான். "இயேசு அவனை நோக்கி நீ உன் வீட்டுக்குத் திரும்பிப்போய் தேவன் உனக்கு செய்தவைகளையெல்லாம் அறிவி என்று சொல்லி, அவனை அனுப்பிவிட்டார். அந்தபடி அவன்போய் இயேசு தனக்கு செய்தவைகளையெல்லாம் பட்டணம் எங்கும் பிரசித்தப்படுத்தினான்" (லூக்கா 8:39) நாமும் அவரை பிரசித்தபடுத்தும் போது, அவர் செய்த நன்மைகளை அறிக்கை செய்கிறவர்களாக இருக்கும் போது அவரில் நிலைத்திருப்போம். அவரும் நம்மில் நிலைத்திருந்து நம்மை ஆசீர்வதிக்கிறார்.

## கட்டளைகளை கைகொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான் :-

"அவருடைய கட்டளைகளைக்கைக்கொள்கிறவன் அவரில் நிலைத்திருக்கிறான் அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்; அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத்தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்." (1யோவான் 3:24)கர்த்தராகிய கிறிஸ்து நமக்கு கொடுத்த வசனங்களை நியாய பிரமாணங்களை கைக்கொள்ளும் போது அவர் நம்மில் நிலைத்திருக்கிறார். வசனத்தை நம்முடையதாக்கும்போது, அதன்படி நாம் நடக்க தீர்மானிக்கும்போது அவர் நம்மில் இருந்து ஆச்சரியமான விதத்தில் செயல்படுவதையும் நமக்குள்ளே இருக்கிற ஆவியானவராலே வெளிப்படையான அற்புதங்களாகவும் அதிசயங்களாகவும் நம்வாழ்வில் உணர முடியும். எனக்கன்பானவர்களே, அவரின் கட்டளைகளை கடைப்பிடித்தால் மகத்தான மாற்றங்களை நம் வாழ்வில் காணமுடியும்.

சீமோன் பேதுருவும் அவனோடு சேர்ந்த சிலரும் இராமுழுவதும் கடலிலே மீன்பிடிக்க வலைகளைப் போட்டும் ஒன்றும் அகப்படவில்லை. வெறுமை, துக்கம், சோர்வு, திகைப்போடு இருக்கும்போது ஆழத்திலே வலையைப் போடும்படி இயேசு சொல்லுகிறார். ஏன்! எதற்கு! என்று கேள்வி கேட்காமல், உம்முடைய வார்த்தையின் படி வலையை போடுகிறேன் என்றான் (லூக்கா 5:5). வலை கிழிந்து போகத்தக்கதாக திரளான மீன்களை பிடித்தார்கள். நாமும் அவருடைய வார்த்தையின்படி செயல்பட வேண்டும் என ஆண்டவர் விரும்புகிறார்.

நம் குடும்ப காரியங்களில் தனிப்பட்ட காரியங்களில் முடிவு எடுக்கக்கூடிய சூழ்நிலையில் அவர் பாதத்தில் காத்திருந்து அவருடைய வார்த்தையின்படி செயல்படும் போது அது வெற்றியுள்ள செயலாக மாறும்.



பொம்மலாட்டம் மூலம் சுவிசேஷம்

அவைகளை நன்மையும் செம்மையுமாய் முடியப்பண்ணுவார் வேத வார்த்தைகளை, கட்டளைகளை வாசிக்கிறவர்களாக அல்ல, அதன்படி செயல்படும் போது நாம் அவரில் நிலைத்திருப்போம்; அவரும் நம்மில் நிலைத்திருப்பார்.

அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் போன இஸ்ரவேலருடைய வாழ்க்கையில் அனேக தோல்விகள். "அப்படியே நான் உங்களுக்குச் சொன்னேன்; நீங்களோ செவிகொடாமல், கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாகத் துணிந்து மலையின் மேல் ஏறினீர்கள்" (உபாகமம் 1:43) கர்த்திரின் கட்டளையை மீறி மலையில் ஏறின இஸ்ரவேலர் எமோரியர்களால் தேனீக்கள் துரத்துகிறதுபோல ஓர்மா மட்டும் முறியடிக்கபட்டார்கள்" என்று பார்க்கிறோம். எனக்கு அன்பானவர்களே, நாம் கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய ஒப்புக் கோடுப்போம் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறுவோம்.


சிறுவர் கூடுகை

**அவரின் இரத்தத்தை, மாமிசத்தை பானம் பண்ணுகிறவன் அவரில் நிலைத்திருப்பான்**

"என் மாமிசத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்." (யோவான் 6:56) பரிசுத்ததோடு சரியான ஆயத்தத்தோடு நமக்காக சிலுவையில் இரத்தம் சிந்தி நம்மை மீட்டெடுத்த ஆண்டவரை நினைவு கூர்ந்து அவருடைய இராப்போஜனத்தில் பங்கு பெறும் போது நாம் அவரில் நிலைத்திருக்கிறோம். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். (1 கொரி 11:28) என்ற வசனத்தின்படி செயல்பட அழைக்கப்படுகிறோம்.

இப்படி அவரில் நாம் நிலைத்திருக்கும் போது மோசேயைப் போல யோசேப்பு, தானியேல் போல் நம்மை உயர்த்தி ஆசிர்வதிக்க வல்லமை உள்ள தேவனாய் இருக்கிறார் அவருடைய சமூகத்தில் நாம் நம்மை தாழ்த்தி அர்ப்பணிப்போம். கர்த்தர் தாமே நம்மையும் நம் குடும்பத்தையும், நம் தேசத்தையும் ஆசீர்வதிப்பாராக ஆமென்.

## ஊழிய அறிவிப்பு

கடந்த காலங்களில் நம்மோடு இணைந்து, தம்முடைய இனிய பாடல்கள் மூலம் தேவனுடைய ஊழியத்தை அநேக இடங்களில் வல்லமையாக நிறைவேற்றிய சகோதரர் திரு. மார்டீன் அவர்கள், தங்கள் குடும்ப சூழ்நிலை மற்றும் வயதின் காரணமாக தற்போது ஊழியத்திலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அவருக்காகவும், சகோதரரின் குடும்பத்திற்காகவும் தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# ஆசீர்வாதமான பெண்கள் கூடுகை

கடந்த 2020ம் ஆண்டு ஜனவரி முதல் வெள்ளிக்கிழமை அன்று வசாவா இன விசுவாசப் பெண்களாக முழு வசாவா இனத்தின் இரட்சிப்புக்காக திறப்பிலே நிற்கக் கூடி வந்தோம். அன்று எடுத்தத் தீர்மானத்தினபடி எல்லா முதல் வெள்ளிக்கிழமைகளும் உபவாச ஜெப நாளாக வசாவா பகுதியில் அனுசரிக்கப்பட்டு வருகிறது.



இரண்டு வருடங்கள் நிறைவுப் பெற்றதை நினைவுகூர்ந்து, தேவனுக்கு நன்றிகூறவும், உபவாச ஜெபத்தின் விளைவாக புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களுக்காக துதி செலுத்தவும் 12.01.2022 அன்று குய்தா கிராமத்தில் பெண்களாகக் கூடினோம். 120க்கும் மேற்பட்ட பெண்கள் கூடி தேவனை ஆராதித்து, தேவன் தங்கள் வாழ்வில் செய்த அற்புதங்களைப் பகிர்ந்து கொண்டு, நன்றி செலுத்தி, வேதத்தை தியானித்து கூடுகையை நிறைவு செய்தோம்.

டோக்கர்வா, வட்தே போன்ற பக்கத்து கிராம விசுவாசிகளும் கூடியிருந்தார்கள். பிசாசின் பிடியிலிருந்து அற்புத சுகம் பெற்ற லட்சுமி எனும் வாலிபப்பெண்ணால் அந்த முழுக் குடும்பமும் இயேசுவை ஏற்றுக்கொண்டனர். அந்தம் எனும் சிறுவன் பேச இயலாமல் இருந்தான். இந்த ஜெபத்தின் மூலம் பேசத் துவங்கியுள்ளான். சூரா பாயின் மகனின் தண்டுவட பிரச்சனை, மந்திரங்கள் பல செய்தும மாறவில்லை ஜெபத்தினால் சுகம் பெற்றான். ஜெபமே ஜெயம்! அல்லேலூயா!

இது போன்ற பல சாட்சிகள் மூலம் தேவ நாமம் மகிமைப்பட்டதுடன் ஏழை விசுவாசிகளின் விசுவாசமும் திடப்படுத்தப்பட்டது. சுனிதா போன்ற பல பெண்கள் இன்று முதல்முறையாக இந்த ஜெபத்தில் கலந்து கொண்டு சுவிசேஷத்தை அறிந்தும் தேவைகளுக்காக ஜெபித்தும் சென்றிருக்கிறார்கள். தேவன் அடையாளங்கள் மூலம் தமது நாமத்தை இம்மக்கள் மத்தியில் உறுதிபடுத்த மன்றாடுவோம். அன்பின் ஐக்கிய விருந்து இக்கூடுகையின் இறுதியில் பரிமாறப்பட்டது. நம் இயக்கப் பங்காளர்களின் உதவியோடும், விசுவாசிகளின் உழைப்போடும் இக்கூடுகை மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.





பெண்கள் கூடுகையின் நிகழ்வுகள்

# ஜெபவிண்ணப்பங்கள்

- பூர்கி பணித்தளத்தில் நாம் கட்டியுள்ள தேவாலயத்தில் தற்போது 9 விசுவாசக் குடும்பங்கள் உள்ளனர். இந்த ஆண்டு மேலும் சில முழு விசுவாசக் குடும்பங்கள் இணைந்து 25 விசுவாசக் குடும்பங்கள் கொண்ட சபையாக தேவன் மாற்ற ஜெபியுங்கள். இதன் மூலம் பூர்கியில் ஒரு மாபெரும் எழுப்புதல் உண்டாகவும் ஜெபியுங்கள்.

- பூர்கி சபையிலிருந்து 3 சுதேச ஊழியர்கள் எழும்ப வேண்டும். அவர்கள் மூலம் அநேக புதிய கிராமங்கள் சந்திக்கப்பட வேண்டும் அதற்கு ஏற்ற விதமாக அவர்களுக்கு பல்வேறு விதமான ஊழியங்களைச் செய்ய பயிற்றுவிக்கப்பட வேண்டும். இதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாக ஜெபியுங்கள்.

- பூர்கியில் ஆர்வம் உடைய நமது விசுவாசிகள் சிலரை பிரித்தெடுத்து அவர்களுக்கு சிறந்த முறையில் வேதாகமம் கற்றுக் கொடுக்கவும் வாரம் ஒரு முறை சிறப்பு வகுப்புகள் நடத்தவும் திட்டமிட்டுள்ளோம் அதற்காக ஜெபியுங்கள். இந்த வகுப்புகளில் வருகிறவர்கள் வரும் காலங்களில் தேவனுக்கு சித்தமானால் சுதேச ஊழியர்களாக அர்பணிப்போடு நமது ஊழியருடன் இணைந்து சுவிசேஷத்தை எடுத்துச் செல்லுகிற பணியிலே இடுபட ஜெபியுங்கள்.

- பூர்கி பணித்தளத்தில் தற்போது தாட்டிகுண்டம் , பந்தேவாய் , தூட்பள்ளி கிராமங்களில் வீட்டு ஜெபக் கூடுகைகள் நடைபெறுகிறது. இவையல்லாது இந்த ஆண்டில் 5 புதிய கிராமங்களில் வீட்டு ஜெபக்கூடுகைகள் ஆரம்பிக்க ஜெபித்து செயல்பட உள்ளோம். இந்த இலக்குகளை அடையவும் சுவிசேஷம் இதன் மூலமாக அநேக ஜனங்களுக்கு எடுத்துச் செல்லப்படவும் ஜெபியுங்கள்

- பூர்கி பணித்தளத்தில் காசிநாத் ஜோயி என்பவருக்கு இரத்தம் சம்பந்தப்பட்ட சரீர பெலவீனம் உள்ளது. நாளுக்கு நாள் பலவீனப்பட்டுக் கொண்டே இருக்கிறார். இவருடைய சுகத்திற்காகவும் இரட்சிப்பிற்காகவும் ஜெபிப்போம்.

- பூர்கி பணித்தளங்களில் அநேகர் கால சூழ்நிலை மாற்றத்தின் காரணத்தால் சளி, காய்ச்சல் என பலவீனப்பட்டுள்ளனர். இதன் விளைவினால் நாடெங்கும் பரவி வருகின்ற கொரோனா தொற்று எளிதில் பரவாமல் இருக்கவும் ஜனங்கள் பாதுகாக்கப்படவும் நல்ல வேலை வாய்ப்புகள் எளிதில் கிடைக்கவும் பொருளாதாரங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

- வியாராவில் சகோ. முக்கேஷ் பாயின் குடிப்பழக்கம் ஒழியவும், அதன் மூலம் அவரின் இருபிள்ளைகள் தீப் உஜ்வல் வாழ்க்கையில் சந்தோஷமும் சமாதானமும் நிலவவும், குடும்க ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபியுங்கள்.

ஞாயிறு ஆராதனையில் பங்குபெற்ற விசுவாசிகளின் ஒரு பகுதி இடம்: பிம்பிரி



# ஜெபவிண்ணப்பங்கள்

- நமது வியாரா பணித்தளத்தில் கபட்வன் என்ற கிராமத்தில் பிறந்து 5 மாதங்களாகியும் சரீர வளர்ச்சி ஏதுமின்றி, எப்போதும் அழுது கொண்டேயிருக்கும் விஷ்ராந்த் என்ற குழந்தை சுகமடைய, விஷ்ராந்தின் பெற்றோர் விஷால் மற்றும் சுனந்தா இயேசுவை ஏற்றுக்கொண்டு ஒளியில் நடக்கவும் ஜெபியுங்கள்.

- நமது வியாரா பணித்தளத்தில் ஜனுபாய் என்ற சகோதரி கொரோனா மற்றும் சிறுநீரகக் கல்லினால் மிகுந்த வேதனைபட்டு வருகிறார். தேவன் விரைவில் அவரை குணப்படுத்தவும் அதன் மூலம் அவரது முழு குடும்பமும் தேவனை ஏற்று கொள்ளவும் ஜெபியுங்கள்.

- வியாரா பணித்தளத்தில் கன்சாலி என்ற கிராமத்தில் வெள்ளி இரவுக் கூடுகையும் , சனி சிறுவர் வகுப்பும் , ஞாயிறு ஆராதனையும் தடையின்றி நடந்து வருகிறது. அதில் கலந்துக்கொள்ளுகிற விசுவாசிகள் அனைவரும் இன்னும் விசுவாசத்தில் வளரவும் , சபை இன்னும் வளர்ந்து பெருகவும் ஜெபியுங்கள்.

- பாந்தர்கவுடா பணித்தளத்தில் கயர்காவ் கிராமத்தைச் சேர்ந்த 16 வயது நிரம்பிய பிரேம் என்ற வாலிபன் சிறு வயது முதல் வாய் பேசமுடியாமல் இருந்தான் நமது ஊழியர் சகோ டிக்சன் மற்றும் சுதேச ஊழியர்களின் ஜெபத்தினால் அற்புதவிதமாக இப்பொழுது ஒரு சில வார்த்தைகளை பேச ஆரம்பித்துள்ளான் வருகிற நாட்களி தேவன் அவனுக்கு முழு விடுதலையை தரும்படி ஜெபியுங்கள்

- வியாரா பணித்தளத்தில் வேராகுயி கிராமத்தைச் சேர்ந்த சகோதரி டாக்கோர் பாயின் எருமை மாடு பால் தர மறுத்து காலால் மிதித்து துன்புறுத்தியது. மூன்று நாட்களுக்குள் எருமை மாடு பால் தர ஆரம்பித்துவிட்டால் , இயேசுவை நம்புவதாகப் பொருத்தனைப்பண்ணி நமது கூடுகையில் ஜெபிக்க வந்தார். தேவன் கிருபையாக அவரை நினைத்தருளி, எருமை மாடு பால் கொடுக்கச் செய்தார். அவர் மூலமாக அந்த கிராமத்தில் நல்ல ஆத்தும அறுவடையை ஆண்டவர் தர ஜெபியுங்கள்

- இந்த வருடத்தில் 2000 வேதாகமங்களை முதல் தலைமுறை விசுவாசிகளுக்கு கொடுக்கத் திட்டமிட்டுள்ளோம். தேவன் அதற்கேற்ற வாசல்களை பணித்தளங்களில் திறந்து தர ஜெபியுங்கள்.



**சுன்னா கிராமத்தில் வீட்டு கூட்டத்தில் நமது ஊழியர்கள்**
**இடம்: பாண்டர்கவ்டா பணித்தளம்**

# ஜெபவிண்ணப்பங்கள்

- பாந்தர்கவுடா பணித்தளத்தில் காயிரி என்ற கிராமத்தில் சங்கீதா என்ற சகோதரி சத்துருவின் பிடியினால் அலைக்கழிக்கப்பட்டு வருகிறார். அவருக்கு ஆண்டவர் சீக்கிரத்தில் நல்ல விடுதலையைத் தரவும் அதன் மூலம் முழுக்குடும்பமும் தேவனை விசுவாசிக்க ஜெபியுங்கள்.
- மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களில் வியாரா, பாந்தர்கவுடா மற்றும் எட்டாப்பள்ளி மாவட்டங்களை மையமாக வைத்து காஞ்சர், நானி டோக்கர்வா, காட்டீஸ்குவா, விசர்வாடிப், கராடா, கயிடோய், கோசாரா, முக்குடுபன், காப்ரி, பிம்பிரி, கயர்காவ், கான்சாலி, குய்தா, இஷ்கண்டி, பந்தேவாய், தாட்டிகுண்டம், தூட்பள்ளி, பூர்கி ஆகிய கிராமங்களில் நடைபெற்று வருகின்ற ஊழியங்கள் சிறப்பாக நடைபெறவும் அந்த கிராமங்கள் முழுவதும் தேவனை அறிந்துக் கொள்ளவும் இந்த கிராமங்களை சுற்றியுள்ள பல புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்படவும் ஜெபியுங்கள். இந்த ஊழியங்களை பொருப்பேற்று செய்து வருகின்ற நமது ஊழியக் குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும் சுகத்துக்காகவும் ஜெபியுங்கள்.

## சாட்சி

கடந்த மாதத்தில் பீல் இனத்தைச் சேர்ந்த வாலிபன் ஒருவன் தன் ஆடுகளை மேய்த்துக் கொண்டு காட்டு வழியே சென்று கொண்டிருந்தான். அங்கு ஒரு பாம்பினால் கடிபட்ட போது நமது காஞ்சர் ஆலயத்திற்கு ஜெபத்திற்காக கொண்டு வந்தார்கள். நமது விசுவாசிகளும் நமது ஊழியர்களும் சேர்ந்து ஊக்கமாக ஜெபித்தனர். தேவன் ஜெபத்தைக் கேட்டு கிருபையாக கொடுத்த சுகத்திற்காக துதியுங்கள். மேலும் அந்த வாலிபன் தேவனை ஏற்று கொள்ளவும் அவன் மூலமாக அந்த கிராமத்தில் சுவிசேஷத்திற்கு ஒரு திறந்த வாசலை தந்து, நல்ல ஆத்தும அறுவடையைத் தரும்படி ஜெபியுங்கள்.

அன்பரின் பணியில்,
**Dr. G. ஜெயக்குமார் மற்றும் ஊழியர்கள்**

இந்த மிஷெனரி ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள எங்கள் வங்கி கணக்கில் ECS மூலம் பணம் அனுப்பி உதவலாம்.

**CANARA BANK, VANNARPETTAI BRANCH, TIRUNELVELI**
**A/C NAME: WESTERN INDIA MISSION**
**A/CNo: 2952101007959**
**IFSCCODE: CNRB0002952**

(பணம் அனுப்பப்பட்ட விபரத்தையும், M.O மூலம் பணம் அனுப்பி ஊழியங்களுக்கு உதவிசெய்வோரும் 9944306154 என்ற செல்போனுக்கு SMS மூலம் தெரியப்படுத்தினால் உங்களுக்கு ஒப்புகை ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

உங்கள் ஜெப தேவைகளுக்கும் மேற்கு இந்திய பகுதிகளில் நடைபெறும் மிஷெனரி ஊழிய விபரங்களை அறிந்து கொள்ளவும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எங்கள் மொபைல் எண்கள் மற்றும் முகவரி:


| | | | |
|---|---|---|---|
| Dr. ஜெயக்குமார் | 9894075795 | சகோ. தங்கராஜ் | 9944306154 |
| சகோ. செல்வக்குமார் | 9994040186 | சகோ. அமிர்தராஜ் | 7666982484 |
| சகோ. ஃபெலிக்ஸ் | 9600992654 | சகோ. கோயில்பிள்ளை | 9159827209 |

இணையதள முகவரி : https://westernindiamission.com

*Tirunelveli Office:*
*Western India Mission,*
*C-98, East Rahmath Nagar,*
*Tirunelveli 627 011.*

*North Tamilnadu:*
*Bro. Amirdharaj*
*No: C13, Yadhavar Street,*
*Annai Theresa Nagar,*
*Ambaseshipuram, Mosur,*
*Arakkonam ,Ranipet 631004*


**DIOCESAN OFFSET PRESS, PALAI - PH : 0462 - 2573182**